துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.3.2025) எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அகில இந்திய காவல்துறை விளையாட்டு கட்டுப்பாட்டு வாரியத்தின் (AIPSCB) சார்பில் நடைபெற்ற 25வது அகில இந்திய காவல்துறை துப்பாக்கி சுடுதல் போட்டியில் வெற்றி பெற்ற அணிகள் மற்றும் காவலர்களுக்கு பதக்கம் மற்றும் கேடயங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், த.வேலு, உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் /காவல்படைத் தலைவர் சங்கர் ஜிவால், காவல்துறை இயக்குநர் / தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம் சந்தீப் ராய் ரத்தோர், அகில இந்திய காவல் விளையாட்டு கட்டுப்பாட்டு குழும தலைவரின் பிரதிநிதி மற்றும் நுண்ணறிவுப் பிரிவு சிறப்பு இயக்குநர் பிரவீன் குமார், காவல்துறை கூடுதல் இயக்குநர் (செயலாக்கம்) முனைவர் இரா. தினகரன், கூடுதல் காவல் ஆணையர் (தெற்கு) முனைவர் என்.கண்ணன், மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 8 கிராம ஊராட்சிகளுக்கு புதிய வழித்தடத்தில் பேருந்துகள் தொடக்க விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கொடியசைத்து பேருந்துகளை துவக்கி வைத்தார். அருகில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி.செந்தில்குமார், திண்டுக்கல் எம்.பி. ஆர்.சச்சிதானந்தம், மாவட்ட ஆட்சியர் எஸ்.சரவணன், மேயர் இளமதிஜோதிபிரகாஷ், துணை மேயர் ச.ராஜப்பா, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆ.நாகராஜன், மார்கிரேட்மேரி, பிலால் உசேன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

பொது விநியோகத் திட்டத்தில் செயல்படும் முழு – பகுதி நேர நியாய விலைக் கடைகளில்

பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் புகார் பதிவேடுகள் வைக்கப்படும்!

சட்டப்பேரவையில் அமைச்சர் அர.சக்கரபாணி அறிவிப்பு!

சென்னை, மார்ச் 23 -

சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின் போது பேசிய உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, "பொது விநியோகத் திட்டத்தில் செயல்படும் முழு – பகுதி நேர நியாய விலைக் கடைகளில், பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் புகார் பதிவேடுகள் வைக்கப்பட்டு பராமரிக்கப்படும்" என்று அறிவித்தார்.

சட்டப்பேரவையில் இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு: -

செ.ராஜேஷ்குமார் : தமிழகத்தில் பொது விநியோக திட்டத்தின்கீழ் செயல்படும் நியாய விலைக் கடைகளில் புகார் பதிவேடு வைக்க அரசு முன்வருமா?

அமைச்சர் அர.சக்கரபாணி : தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 37,299 முழுநேர மற்றும் பகுதிநேர நியாய விலைக் கடைகள் அனைத்திலும் புகார் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. கட்டணமில்லா தொலைபேசி எண் 1967 மற்றும் 18004255901 என்ற எண்ணிலும், பொதுமக்கள் தங்கள் புகார்களைத் தெரிவிக்கலாம். அதுதவிர, www.tnpds.gov.in என்ற இணையதளத்தின் மூலமாகவும் குடும்ப அட்டைத் தாரர்கள் தங்களது புகார்களை பதிவு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளலாம்.

ஒவ்வொரு நியாய விலைக் கடையிலும் குடும்ப அட்டைதாரர்கள் தங்களது குறைகளை தொலைபேசியில் தெரிவிக்க ஏதுவாக, நியாய விலைக் கடைகளில் உள்ள தகவல் பலகையில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர், அரசு முதன்மைச் செயலாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வழங்கல் அலுவலர், துணை ஆணையாளர், உதவி ஆணையாளர், வட்ட வழங்கல் அலுவலர், தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக் கழக அலுவலர்கள் மற்றும் கூட்டுறவுத் துறை அலுவலர்கள் ஆகியோரின் தொலைபேசி எண்கள் இடம்பெற்றுள்ளன. இவை தவிர, குடும்ப அட்டைகள் தொடர்பான குறைகள் தீர்வுக்காக மாதந்தோறும் சனிக்கிழமை அன்று முகாம்கள் நடத்தப்பட்டு, வட்ட அளவில் குறை தீர்க்கும் முகாம்கள் நடைபெற்று வருகின்றன?

செ.ராஜேஷ்குமார்: ஏற்கெனவே தமிழ்நாடு முழுவதும் சமூக ஆர்வலர்கள், அதேபோல் அரசியல் கட்சியினுடைய பிரதிநிதிகள் போன்றவர்களையெல்லாம் வைத்து ஒரு கண்காணிப்புக் குழு ஏற்

படுத்துவதற்கு ஒரு G.O. இருக்கிறது. அந்தக் கண்காணிப்பு குழு இருந்திருந்தால், இன்றைக்கு அங்கே என்னென்ன தவறுகள் நடைபெறுகின்றன என்பதை நாம் பார்க்க முடியும்.

இப்போது தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய நியாய விலைக் கடைகளில், அந்த புகார் பெட்டிகளின்மூலம் எத்தனை புகார்கள் வந்திருக்கின்றன; அதேபோல், புகார் பதிவேடு புத்தகத்தின்மூலம் எத்தனை புகார்கள் வந்திருக்கின்றன?

அமைச்சர் அர.சக்கரபாணி: உறுப்பினர் அவர்கள், புகார் பெட்டி இருக்கிறது, ஆனால் விற்பனையாளர் அதை பொதுமக்களுக்கு தெரிகின்ற வகையிலே அதை வைப்பதில்லை என்று சொல்லியிருக்கிறார். அதை அனைத்து நியாய விலைக் கடைகளில் இருக்கின்ற விற்பனையாளர்களிடத்திலே சொல்லி, சம்பந்தப்பட்ட அலுவலர்களிடத்திலே சொல்லி, பொதுமக்களுக்குத் தெரிகின்ற விதத்திலே புகார் பெட்டிகள் அங்கே முறையாக பராமரிக்கப்படும்.

அவர்களை மனு எழுதிக் கொடுக்கச் சொல்லி இருக்கிறோம். அங்கே புகார் பெட்டி வைக்கப்படும். (குறுக்கீடு) இல்லையென்றால் அவர்களின் குடும்பத்தில் யாராவது சம்பந்தப்பட்ட அலுவலர்கள் இருந்தால்கூட, படிக்கத் தெரிந்தவர்கள் இருந்தால், எழுதி புகார் பெட்டியில் மனுப் போட்டால் அதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஏனென்றால், நான் குறிப்பிட்ட அத்தனை அலுவலர்களும் அதை ஆய்வு செய்வார்கள். அவர்கள் அதை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுப்பார்கள்.

முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பின்பு இதுவரை நியாய விலைக் கடைகள் தாமதமாகத் திறத்தல் தொடர்பாக 11,471 புகார்களும், அத்தியாவசியப் பொருட்கள் கூடுதல் விலையில் விற்பனை செய்ததாக 2,463 புகார்களும், அத்தியாவசியப் பொருட்கள் உரிமை அளவிற்கு வழங்க மறுத்தலில் 19,756 புகார்களும், நியாய விலைக் கடையில் சேவைக் குறைபாடு தொடர்பாக 4,586 புகார்களும், நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்கள் இருப்பின்மை தொடர்பாக 1,663 புகார்களும், உரிம அளவிற்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்காமை தொடர்பாக 15,327 புகார்களும், அதேமாதிரி தரக் குறைவு தொடர்பாக சுமார் 1,917 புகார்களும் மற்றும் இதர இனங்கள் தொடர்பாக 40,352 புகார்களும் என மொத்தம் 97,535 புகார்கள் பதியப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதேமாதிரி, புகார் பதிவேடு வழியாக பெறப்பட்ட புகார்கள் 875. எனவே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, பொதுமக்களுக்கு தெரிகின்ற வகையிலே அந்தப் புகார் பெட்டிகள் அங்கே வைத்து பராமரிக்கப்படும். அதனடிப்படையிலே அந்தத் துறையினுடைய அலுவலர்களுக்கு நாங்கள் அறிவுரை கூறி, யார் புகார் தெரிவித்தாலும், அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

செ.ராஜேஷ்குமார்: ஒரு குடும்ப அட்டையிலே 5 வகையான குறியீடுகள் வைத்திருக்கிறீர்கள். அந்தக் குறியீட்டைத் திருத்துவதற்கு இங்கே Commissioner அலுவலகத்திலே வந்துதான், login செய்து அதை மாற்றக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதற்கான அந்த அதிகாரத்தை எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு வழங்க ஆவன செய்யப்படுமா?

எத்தனை முழுநேர ரேஷன் கடைகள், பகுதிநேர ரேஷன் கடைகள், எத்தனை குடும்ப அட்டைகள் தமிழகத்தில் வழங்கப்பட்டிருக்கின்றன?

அமைச்சர் அர.சக்கரபாணி: உறுப்பினர் அவர்கள், முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகளை, அதாவது NPHHலிருந்து PHH ஆக முன்னுரிமையுள்ள குடும்ப அட்டைகளாக வகைமாற்றம் செய்வதற்கு, மாவட்ட ஆடசித் தலைவருக்கே அதிகாரத்தைக் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். அந்த மொத்த தரவை, தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்து மாவட்ட குடும்ப அட்டைகளினுடைய எண்ணிக்கை தரவுகள் எங்களுடைய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர் அலுவலகத்தில் தான் இருக்கிறது. எனவே, அந்தத் தரவுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு ஒப்படைப்பது சிரமம். எனவே, நீங்கள் எந்தெந்த குடும்ப அட்டைகளை முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகளை முன்னுரிமையுள்ள குடும்ப அட்டைகளாக வகைமாற்றம் செய்ய விரும்புகிறீர்களோ அதை பட்டியலிட்டு கொடுத்தால் அதை மாற்றம் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதை இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்கள் மாவட்டத்தில் சுமார், நிறைய குடும்ப அட்டைகள் இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மொத்தத்தில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இதுவரையில் 52 இலட்சத்து 28 ஆயிரத்து 943 பயனாளிகள். 16 இலட்சத்து 8 ஆயிரத்து 675 முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் முன்னுரிமையுள்ள குடும்ப அட்டைகளாக வகைமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலே 50 ஆயிரத்து 934 முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் முன்னுரிமையுள்ள குடும்ப அட்டைகளாக வகைமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. கடைகளைப் பற்றி சொன்னார், ஏற்கெனவே மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார். முழுநேர கடைகள், பகுதிநேர கடைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசு பொறுப்பேற்றதற்கு பின்பு சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட கடைகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, எத்தனை குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருக்கிறது என்று கேட்டார்கள். தமிழகத்திலே முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்கு பின்பு 752021 முதல் இதுவரையில் சுமார் 18 இலட்சத்து 9 ஆயிரத்து 677 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் இன்று வரை புழக்கத்தில் 2 கோடியே 25 இலட்சத்து 59 ஆயிரத்து 224 குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளன. 51 ஆயிரத்து 327 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு அதற்கு புதிய அட்டைகள் அச்சடிக்கும் பணி இன்றைக்கு நடந்து வருகிறது. அதோடு ஒரு இலட்சத்து 67 ஆயிரத்து 795 விண்ணப்பங்கள் பரிசீலனையில் இருக்கிறது. அந்த விண்ணப்பங்களையும் பரிசீலனை செய்து விரைவிலே குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு துறையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 37 ஆயிரத்து 224 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 1,330 குடும்ப அட்டைகள் அச்சில் உள்ளன. 2,428 விண்ணப்பங்கள் ஆய்வில் உள்ளன.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

சிவகங்கையில் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் விவசாயிகளுக்கு உபகரணங்களை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித், எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி, திருப்புவனம் பேரூராட்சி மன்றத் தலைவர் த.சேங்கைமாறன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்றப் பிறகு

3 ஆயிரத்திற்கு மேற்பட்ட ரேஷன் கடைகள் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன!

சட்டப்பேரவையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

சென்னை, மார்ச் 22- சட்டப்பேரவையில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், முதலமைச்சர் தலை மையிலான இந்த அரசு பொறுப்பேற்றப் பிறகு, 3 ஆயிரத்திற்கு மேற்பட்ட ரேஷன் கடைகள் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன என குறிப்பிட்டார்.

இது குறித்து உறுப்பினர்கள் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் அளித்த பதிலும்

என்.அசோக்குமார்: பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொளக்குடி ஊராட்சியில் உள்ள முழுநேர நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்: (அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்டம், பேராவூரணி சட்டமன்றத் தொகுதியில் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் கொளக்குடி என்ற முழுநேர நியாய விலைக் கடை வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்காணும் கொளக்குடி முழுநேர நியாய விலைக் கடைக்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக 12 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடம் கட்டுகின்ற பணி விரைந்து நடைபெற்று வருகிறது.

என்.அசோக்குமார்: அமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதுபோன்று, பேராவூரணி தொகுதியில் கிட்டத்தட்ட 25 கட்டடங்கள் பேராவூரணி பேரூராட்சி, பேராவூரணி, சேதுபாவாசத்திரம், திருவோணம், பட்டுக்கோட்டை ஒன்றியங்களில் 25 கட்டடங்கள் தேவைப்படுகின்றன. தயவுகூர்ந்து அந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கு நிதி தருமாறு அன்புடன் கேட்டு அமர்கின்றேன்.

அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்: கொளக்குடி ஊராட்சியைப் பொறுத்தவரையில் அந்தக் கட்டடம் இப்போது அவருக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. கேள்வி சுற்றுவட்ட நிலையிலேயே அதற்கான விடையும் கிடைத்து இருக்கிறது. அதைப்போன்று இப்போது 25 கடைகள் என்று கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். அதுவும் வெகு விரைவிலே பரிசீலித்து நிறைவேற்றப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 34,902 நியாய விலைக் கடைகளில், 6,215 கடைகள் தனியார் மற்றும் வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்றன. அதில் 2,545 கடைகள் தற்போது சொந்தக் கட்டடங்களில் இயங்குவதற்கு, புதிதாக கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மீதமுள்ள கடைகளும் வெகு விரைவில் சொந்தக் கட்டடங்களில் இயங்குவதற்கு துறைரீதியாக முழுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்று சொந்தக் கட்டடங்கள் இல்லாத நியாய விலைக் கடைகளை கண்டறிந்து, அவை அனைத்திற்கும் தீர்வு காண்பதற்கு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தி இருக்கிறார்கள். அது நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும்.

என்.அசோக்குமார்: அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, பேராவூரணி பகுதியில் நிறைய அங்காடிகள் பிரிக்கப்பட வேண்டியிருக்கிறது. பேராவூரணி புதுத்தெரு, வீரராகவபுரம், துலுக்கவிடுதி, ஒட்டங்காடு, பூவலூர், பாலத் தளி, மணவயல், புக்கரம்பை ஊராட்சி, கொள்ளுக்காடு, நாடார் தெரு, கல்லூரணிக்காடு புதுத்தெரு, பூவணத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும், அதுபோல சம்பை, ஆண்டிக்காடு, மருதங்கவயல், தேனங் காடு, புக்கரம்பை, கஞ்சங்காடு, குறவன்கொல்லை, கொள்ளுக்காட்டை இரண்டாகப் பிரிக்க வேண்டும். வீரியன் கோட்டையில் உள்ள ஆயிரம் கார்டுகளை பிரித்து முடச்சிக்காட்டிற்கு தனியாக ஒரு அங்காடி தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கட்டப்படும் கட்டடங்களில், சமயத்தில் அளவு குறைவாக இருக்கிறது. அதில் மூட்டைகள் அடுக்கி வைப்பதற்கு சிரமமாக இருக்கிறது. கைரேகை வைப்பதில் நிறைய சிக்கல்கள் இருக்கின்றன. உணவுத் துறை அமைச்சர் அவர்கள், அருள்கூர்ந்து அதற்கு மாற்று ஏற்பாடு செய்து தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்: உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இயங்கி வருகின்ற பல்வேறு நியாய விலைக் கடைகளை பிரித்து, புதிதாக கடைகளை உருவாக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். அந்தக் கோரிக்கையில் நியாயம் இருக்கிறது. ஆனாலும், சில விதிமுறைகளை நாம் கடைபிடிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். குறிப்பாக, நகர்ப்புறங்களை பொறுத்தவரை, 800 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருந்தால் அதைப் பிரிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம். அதேபோல், கிராமப் பகுதிகளில் 500 குடும்ப அட்டைகளுக்குமேல் இருந்தால் அதைப் பிரிப்பதற்கும், மலைப் பகுதிகளில் 400 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருந்தால் அதைப் பிரிப்பதற்கும் ஏற்பாடு செய்யலாம்.

ஆனால், அவ்வாறு தாய்க் கடைகளைப் பிரிக்கும் நேரத்தில், அந்தக் கடையிலிருந்து பகுதிநேர கடையோ அல்லது புதிதாக அமையக்கூடிய முழுநேர கடையோ, அதற்கு ஒன்றரை கிலோ மீட்டருக்கு குறையாத இடைவெளி இருக்க வேண்டுமென்பதையும், அவ்வாறு பிரிக்கும் போது தாய்க் கடையில் 500 அட்டைகள் தொடர்ந்து இருக்க வேண்டும். பகுதிநேர கடைகளில் 150 அட்டைகள் இருக்க வேண்டும் என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். எனவே, உரிய கோரிக்கையை, முறையாக மாவட்ட அலுவலர்களிடம் கொடுத்தால், அவர்கள் ஆய்வு செய்து விதிகளுக்கு ட்பட்டு இருக்கின்ற அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு தயாராக இருக்கிறார்கள்.

குறிப்பாக, நியாய விலைக் கடைகளை பொறுத்த வரையில், உணவு பொருள்கள் வழங்குவது சம்பந்தப்பட்டது என்ற காரணத்தால், அந்தப் பொருட்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்பதோடு, எலிகள் போன்றவற்றிடம் இருந்து அதை பாதுகாக்கும் கடமையும் இருக்கிறது. ஆகவே, முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரை, அனைத்து கடைகளையும் சொந்தக் கடைகளாகவும், மேலும், பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தி இருக்கிறார்கள். மேலும் இருக்கக்கூடிய கடைகளில், ஆண்டொன்றுக்கு 2,500 கடைகளைப் புதுப்பிக்கும் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முனைவர் தாரகை கத்பட: விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட மலை கிராமங்களில் ration shopல் broadband connection மிகவும் slowஆக இருக்கிறது. அதை பரிசீலிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்: உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் broad band வசதியைப் பொறுத்தவரையில், மலைப் பகுதி என்று சொல்கிற காரணத்தால் ஏதாவது அசௌகரியங்கள் இருக்கலாம். அதையும் போக்குவதற்கான உரிய நடவடிக்கை எடுப்பதற்கு, மாவட்ட அலுவலர்களிடத்தில் அந்தத் தகவலைத் தெரிவித்தால், அது நிவர்த்தி செய்து தரப்படும்.

அதிலும், உறுப்பினர் என்.அசோக்குமார் அவர்கள் உள்ளிட்ட உறுப்பினர்களும் குறிப்பிடுவதைப் பார்த்தால், கைரேகை சமாச்சாரத்தை பொறுத்தவரையில் உணவுத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஆங்காங்கிருந்து வரக்கூடிய புகார்கள் உடனடியாக நிவர்த்திச் செய்யப்படு கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கு. பிச்சாண்டி: என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற பல்வேறு கிராமங்களில் துணைக் கிராமங்கள் இருக்கின்றன. அவை இரண்டு கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கின்றன. அங்குள்ளவர்கள் ration பொருட்களைப் பெற வேண்டுமானால், இரண்டு கிலோ மீட்டர் தூரம் வர வேண்டிய நிலை இருக்கிறது. ஆனால், card குறைவாக இருக்கிறது என்பதற்காக அந்தக் கிராமங்களிலே பகுதி நேரக் கடைகள் திறக்கப்படாமல் இருக்கின்றன. நாங்கள் மக்களைச் சந்திக்கும்போது, மக்களுடைய மிக முக்கியமான கோரிக்கையாக இருப்பது, பகுதி நேரக் கடைகள் தேவை என்கின்ற நிலை எல்லா இடங்களிலிலும் இருக்கிறது.

என்னுடைய தொகுதியிலுள்ள கருங்கல்பட்டு, புதூர் போன்ற பல்வேறு கிராமங்களிலே அவை தேவையாக இருக்கின்ற காரணத்தால், எந்தெந்த இடங்களிலே இது போன்ற துணைக் கிராமங்கள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் பகுதி நேரக் கடைகள் தமிழகம் முழுவதும் திறந்து வைத்தால், மக்களுடைய அந்தப் பிரச்சினைத் தீரும். அதை நம்முடைய அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்: துணை சபாநாயகர் அவர்கள் எழுப்பி இருக்கின்ற கோரிக்கையைப் போல, மக்கள் தங்களுடைய கோரிக்கைகளை மக்கள் பிரதிநிதிகளான நம்மிடத்திலே தருகிறார்கள். ஆனால், அதே நேரத்தில் அதைச் செயல்படுத்துவதற்கு அரசும் சில விதிகளை குறிப்பிட்டிருக்கின்ற காரணத்தால், அந்த விதிகளும் மீறப்படாமல் இருக்க வேண்டும். அவர் நிலைமைகளை நன்குணர்ந்தவர். அவரும் பல கடைகளைப் புதிதாகத் தொடங்கியிருப்பது—குறிப்பாக, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்றப் பிறகு மூவாயிரத்திற்கும் மேற்பட்ட கடைகள் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதையும், மூவாயிரம் கடைகளைப் புதிதாக திறந்து இருக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியில், துணை சபாநாயகர் அவர்களுடைய கோரிக்கைகளையும், தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பதிலளித்தார்.

மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திலிருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 36 புதிய பேருந்துகளை அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா, மேயர் இந்திராணி பொன் வசந்த், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், வெங்கடேசன் எம்.எல்.ஏ. பூமிநாதன் எம்.எல்.ஏ., துணை மேயர் நாகராஜன், வாசுகி சசிகுமார், சரவணபுவனேஸ்வரி மற்றும் அதிகாரிகள் உடன் உள்ளனர்.